## வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு

கடவுள் எல்லா சக்திகளுக்கும் அப்பாற்பட்டவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.
நம்முடைய இந்த வாழ்க்கைக்கும், இதற்கு பிறகுள்ள வாழ்க்கைக்கும் நன்மையானவைகளை நிச்சயமாக செய்ய வல்லவா நமது ஆண்டவர். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளை வாசிப்போம்.

மத்தேயு 7:7-11

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;
தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;
ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்;
தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.
உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?
ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

உலகில் ஒரு தகப்பன் தன் மகனுக்கு நன்மைகளைச் செய்து, தன் மகனின் வாழ்க்கைப் பாதையை நல்லபடியாக அமைத்துக் கொடுக்கவேண்டுமென மிகவும் பிரயாசப்படுவதை பொதுவாகப் பார்க்கலாம்.
இந்த தகப்பனின் தகப்பனும் அப்படியே இவரை வளர்க்க பிரயாசப்பட்டிருப்பார்.....இதேபோன்று, எதிர்காலத்தில் இந்த மகனும் ஒரு பிள்ளைக்கு தகப்பனாகி, அந்தப்பிள்ளையை வளர்க்க பிரயாசப்படும் தந்தையாவான்.
இது "வாழையடி வாழையாக" வந்தது.........."வாழையடி வாழையாக" தொடர்கிறது.
இந்த பிரயாசங்களும், நன்மைகளும் இந்த உலகத்தின் நல்ல வாழ்க்கைக்கு உதவி செய்கிறது.
இவர்கள் எல்லோரையும் (நம் எல்லோரையும்) வேதம் சொல்கிறது பொல்லாதவர்கள் என்று.
நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையிலே, நன்மையும் தீமையும் செய்பவர்கள்.
பொல்லாதவர்கள் என்ற இந்த வார்த்தைக்கு இந்த இடத்திலே இன்னுமொரு அர்த்தம், பாவம் உள்ளவர்கள். (ஆங்கில மொழிபெயர்ப்பிலே இதைப் பார்க்கலாம்)
நம்முடைய பாவம் மட்டுமல்ல, நம்முடைய முன்னோர்களின் பாவமும் நம்மோடு சேர்ந்துகொள்கிறது.
*இதை நாம் உணர்ந்துள்ளதால்தான்,*
*நாம் இறப்பதற்கு முன், நமது பாவத்தைப் போக்கி ஆத்மீக புண்ணியத்தை சேர்த்துக்கொள்ள,*
நமது முன்னோர்கள் கடைபிடித்த ஏதோ ஒரு காரியத்தை நாம் பாரம்பரியமாகவோ, சடங்காசாரமாகவோ, மரியாதைக்குரிய காரியமாகவோ, கடமைக்காகவோ, பயத்துக்காகவோ,.... இன்னும் பல காரணத்தினாலோ செய்கிறோம்.
இப்படிச் செய்த நமது முன்னோர்கள் இறந்தபிறகு, அவர்கள் ஆத்மா சாந்தியடைய நாம் அவர்களுக்காக தொடர்ந்தும் ஒரு சில காரியங்களை செய்கிறோம். அப்படியென்றால், நம் முன்னோர்கள் செய்த நன்மைகள், மற்ற காரியங்கள் அவர்கள் ஆத்துமா காத்துக்கொள்ளப்பட முழுமையான பலனைக் கொடுக்கவில்லை. அது நம்மோடு முடியாமல், நமக்குப் பின் நம் பிள்ளைகளும் தொடர்கிறார்கள்.....
இது ஆதியிலிருந்து, நமக்கு வந்து, நமக்குப்பிறகு இது தொடர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறது.
........முடிவும் இல்லை, நிறைவும் இல்லை, நிச்சயமும் இல்லை....
பொல்லாதவர்களான நம்மாலே, இதை நிச்சயமாக முடிக்கமுடியாது.

சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறவரும், பாவமில்லாதவரும், பரமதந்தையான ஆண்டவர் ஒருவர்தான் நம் ஆத்துமாவுக்கும் சேர்த்து எல்லா நன்மைகளையும் நிச்சயமாக கொடுக்க வல்லவர்.
*இதைத்தான் வேதம் சொல்கிறது:*
பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?
எனவே முன்னோர்களுக்கு நாம்-/-நமக்கு நம் பிள்ளைகள்-/-பிள்ளைகளுக்கு அதன் பிள்ளைகள்.....
என்று முடிவில்லாத, நிறைவில்லாத, நிச்சயமில்லாத காரியங்களை ஒருபுறம் வைத்துவிட்டு,
கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; என்று சொன்ன
நமது ஆண்டவரிடம் கேட்கும்பொழுது, நமக்கு இரங்கி நமக்கு அருள் செய்வார்.
நமக்கு இரங்கும் ஆண்டவரை நாம் ஆவலோடு தேடினால், நாம் அவரை கண்டடைய அவரே உதவி செய்வார்.
அந்த தெய்வத்தோடு ஐக்கியம் கொள்ள வாஞ்சிக்கும்போது, நம்மை அவர் தம்மிடத்திலே ஏற்றுக்கொண்டு, இம்மைக்கும் மறுமைக்கும் உள்ள எல்லா நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம்.
*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*